1116. காலியிடங்களை நிரப்புக :

குடும்பத்திற்கு .... என்பதை ஊக்குவிக்கவும் மக்கள் தொகையை .... ம் ஆண்டில் நிலைப் படுத்தவும் 2000-ம் ஆண்டின் தேசிய மக்கள் தொகை கொள்கையில் ஏற்று கொள்ளப்பட்டது.

A) இரண்டு குழந்தை திட்டம், 2020
B) ஒரு குழந்தை திட்டம், 2030
C) இரண்டு குழந்தை திட்டம், 2046
D) ஒரு குழந்தை திட்டம், 2050

(TNPSC – GROUP I SERVICES – 2015)

1117. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையை தேர்வு செய்க.

a) வரி வருவாய்	1. வருங்கால வைப்பு நிதி
b) மூலதன வருவாய்	2. வருவாய் மற்றும் செலவு மீதான வரிகள்
c) திட்டமில்லா செலவு	3. விற்பனை வரி
d) மதிப்பு கூட்டிய வரி	4. வட்டி செலுத்துதல்கள்

	a	b	c	d
A)	4	3	2	1
B)	1	3	4	2
C)	2	1	4	3
D)	2	3	4	1

(TNPSC – GROUP I SERVICES – 2015)

1118. இந்தியாவின் தேசிய புள்ளி விவர ஆணையம் இவரது தலைமையில் அமைந்திருந்தது

A) மான்டெக் சிங் அலுவாலியா
B) சி. ரெங்கராஜன்
C) ரகுராம் ராஜன்
D) வி.கே.ஆர்.வி. ராவ்

(TNPSC – GROUP I SERVICES – 2015)

1119. இந்திய நிதி முறையின் கட்டமைப்பு இதனை உள்ளடக்கியது அல்ல

A) தொழில் நிதி B) வேளாண் நிதி
C) வளர்ச்சி நிதி D) பற்றாக்குறை நிதி

(TNPSC – GROUP I SERVICES – 2015)

1120. MGNREGS பிற ஏழ்மை நீக்கும் திட்டங்களிலிருந்து கீழ்க்கண்ட விதத்தில் வேறுபடுகிறது.

I. MGNREGS குறிப்பிட்ட ஏழைகளின் வருவாயினை அதிகரிக்கும்

II. இது குடிமக்கள் மற்றும் அடிப்படை உரிமையை ஆதாரமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது.

III. தொடர்ந்த மற்றும் சமுதாய கண்காணிப்பதற்கான வழிமுறைகளை உறுதி செய்கிறது.

IV. மாநில மற்றும் மத்திய அரசுகளின் ஆணைகளுக் கிணங்க செய்ல்படுகிறது.

A) I மற்றும் II B) II மற்றும் III
C) I மற்றும் IV D) II மற்றும் IV

(TNPSC – GROUP I SERVICES – 2015)

1121. உச்சநீதிமன்றத்தால் இதை ஆராய்வதற்காக நீதியரசர் D.P. வாத்வா குழு அமைக்கப்பட்டது.

A) காப்பீட்டுத் திட்டங்கள்
B) நாட்டின் கருப்புப் பணத்தின் அளவு
C) கிராம வளர்ச்சித் திட்டங்களின் செயல்பாடுகள்
D) பொது விநியோக முறை

(TNPSC – GROUP I SERVICES – 2015)

1122. இந்தியாவில் உரங்களுக்கான ஊட்டச்சத்தின் அடிப்படையிலான மானியக் கொள்கை துவங்கிய ஆண்டு

A) 1966 B) 1977 C) 1991 D) 2010

(TNPSC – GROUP I SERVICES – 2015)

1123. பின்வருவனவற்றில் எவை சரியாக பொருந்தவில்லை? கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளை பயன்படுத்தி உங்கள் விடையை தேர்ந்தெடுக.

I. கடன் உருவாக்கம்	- இந்தியன் ரிசர்வ் வங்கி
II. வணிக வங்கிகள்	- வைப்புகளை ஏற்றுக் கொள்ளுதல்
III. இந்தியன் ரிசர்வ் வங்கி	- கடன் கட்டுப்படுத்துதல்
IV. எண்ணளவு கட்டுப் பாட்டு முறைகள்	- பட்டியல் வங்கிகள்

A) I மட்டும் B) I மற்றும் II
C) II மற்றும் IV D) I மற்றும் IV

(TNPSC – GROUP I SERVICES – 2015)

1116 ....C 1117 ....C 1118 .....B 1119 .... D 1120 ...... B 1121 ..... D 1122 ..... D 1123 .... A

1124. இந்தியாவில் விரைவான மக்கள் தொகை வளர்ச்சி ஏற்பட்டது இக்காலக் கட்டத்தில் ஆகும்.

A) 1891-1921 ஆண்டுகளில் B) 1921-1951 ஆண்டுகளில்
C) 1951-1981 ஆண்டுகளில் D) 1981-2001 ஆண்டுகளில்

(TNPSC – GROUP I SERVICES – 2015)

1125. 2010-11 ஆம் ஆண்டில் உலகளாவிய பால் உற்பத்தியில் இந்தியாவின் தரம் என்ன?

A) முதலிடம் B) இரண்டாமிடம்
C) மூன்றாமிடம் D) நான்காமிடம்

(TNPSC – GROUP I SERVICES – 2015)

1126. புதிய பொருளாதார கொள்கையில் பொதுத் துறையின் கீழ் எந்த தொழில் நிறுவனம் ஒதுக்கீடு செய்யப் பட்டது?

A) அணுமின் சக்தி B) பருத்தித் தொழில்
C) சர்க்கரை தொழில் D) தேயிலைத் தொழில்

(TNPSC – GROUP I SERVICES – 2015)

1127. வணிக சக்தி நுகர்வின் அடிப்படையில் கீழ்க்காணும் இந்திய துறைகளை இறங்கு வரிசையில் வரிசைப் படுத்துக.

1. இல்லத்துறை 2. வேளாண்மை
3. தொழிற்சாலை 4. போக்குவரத்து

A) 4, 3, 1, 2 B) 3, 4, 1, 2
C) 3, 4, 2, 1 D) 4, 1, 3, 2

(TNPSC – GROUP I SERVICES – 2015)

1128. ஆகஸ்ட் 2015ல் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப் பட்ட 'இந்திரதனுஸ்' திட்டத்தின் நோக்கம்

A) தனியார் துறை வங்கிகளை நிர்வகிக்க தனி அமைப்பை ஏற்படுத்துவது
B) பொதுத் துறை வங்கிகளை மேம்படுத்துவது அல்லது சீரமைப்பது
C) வங்கி சாரா நிதி நிறுவனங்களை மீட்டு சீரமைப்பது
D) ஊரக இந்தியாவில் புதிய வங்கிகளை அறிமுகப் படுத்துவது

(TNPSC – GROUP I SERVICES – 2015)

1129. இந்திய திட்டக்குழுவின் தலைவர் யார்?

A) இந்திய குடியரசு தலைவர்
B) இந்திய பிரதம மந்திரி
C) இந்திய நிதி அமைச்சர்
D) இந்திய துணைக் குடியரசு தலைவர்

(TNPSC – VAO – 2016)

1130. முதன்மைத் துறை இதை உள்ளடக்கியது

A) வணிகம் B) கட்டுமானம்
C) தொலை தொடர்பு D) விவசாயம்

(TNPSC – VAO – 2016)

1131. முதல் மக்கள் தொகை ஆராய்ச்சியாளர் யார்?

A) T.R. மால்தஸ் B) ஆதம் ஸ்மித்
C) J.S. மில் D) கார்ல் மார்க்ஸ்

(TNPSC – VAO – 2016)

1132. கீழ்க்கண்ட கூற்றை கவனி

துணிபு (A) : பத்தாவது ஐந்தாண்டு திட்டத்தின் காலம் 2002 - 2007 து-டே-த்-யு
காரணம் (R): வறுமை மற்றும் மக்கள் தொகை வளர்ச்சியை குறைத்தலுக்கு முன்னுரிமை

A) (A) சரி ஆனால் (R) என்பது தவறு
B) (A) தவறு ஆனால் (R) என்பது சரி
C) (A) மற்றும் (R) இரண்டும் சரி. (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்.
D) (A) மற்றும் (R) இரண்டும் தவறு மற்றும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம் அல்ல

(TNPSC – VAO – 2016)

1133. குறுவிவசாயி என்பவர்

A) 1.25 ஏக்கர் நஞ்சை (அல்லது) 2.5 ஏக்கர் புஞ்சை (அ) அதற்கும் குறைவாக விவசாயம் செய்கிறவர்
B) 2.5 ஏக்கர் நஞ்சை (அ) 5 ஏக்கர் புஞ்சை (அ) அதற்கும் குறைவாக விவசாயம் செய்கிறவர்
C) 2.5 ஏக்கர் புஞ்சை (அ) 5 ஏக்கர் நஞ்சை (அ) அதற்கும் குறைவாக விவசாயம் செய்கிறவர்
D) 1.25 ஏக்கர் புஞ்சை (அ) 2.5 ஏக்கர் நஞ்சை (அ) அதற்கும் குறைவாக விவசாயம் செய்கிறவர்

(TNPSC – VAO – 2016)

1134. கீழ்க்கண்ட கருத்துகளில் தவறானதைச் சுட்டிக் காண்பிக்கவும் :

கருத்துகள்:

A) ஆதரவற்ற விதவைச்சான்று வட்டாட்சியரால் வழங்கப்படுகிறது
B) கிராம பஞ்சாயத்துகளின் பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவாளராக கிராம நிர்வாக அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
C) வாரிசுச் சான்றிதழ் வட்டாட்சியரால் வழங்கப்படுகிறது
D) வருமானச் சான்று வட்டாட்சியரால் வழங்கப்படுகிறது

(TNPSC – VAO – 2016)

1124 .... C 1125 .... A 1126 ..... A 1127 .... B 1128 ...... B 1129 ..... B 1130 ..... D 1131 .... A 1132 ..... C 1133 ..... A
1134 .... A

1135. இயற்கைவாதிகள் அதிக முக்கியத்துவம் கொடுத்தது
A) உற்பத்தித் தொழில் B) வேளாண்மை
C) சேவைத் துறை D) படை வீரர்கள்
(TNPSC – VAO – 2016)

1136. நிகர நாட்டு உற்பத்திக்கும் (NNP) நிகர உள்நாட்டு உற்பத்திக்கும் (NDP) இடையே உள்ள வேறுபாடானது
A) தேய்மானம்
B) உலகின் பிற பகுதிகளிலிருந்து நடப்பு மாற்றம்
C) மறைமுக வரி
D) வெளிநாடுகளிலிருந்து வரும் நிகரக் காரணி வருவாய்
(TNPSC – VAO – 2016)

1137. .... திட்டம் பெண்கள் சுய உதவிக் குழுக்கள் போன்ற திட்டங்கள் வழியாகப் பெண்களின் அதிகாரக் குவிப்பு மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கான வழிகாட்டுகிறது.
A) குறுகிய கால இல்லங்கள்
B) குடும்ப ஆலோசனை மையம்
C) சுயம்ஸிதா
D) திறன் மேம்பாடு
(TNPSC – VAO – 2016)

1138. மாநிலத்தில் உள்ள வருவாய் நீதிமன்றம் கீழ்க்காணும் எந்த வழக்குகள் தொடர்புடையது?
A) பட்டா மாறுதல் மேல்முறையீடு வழக்குகள்
B) குடிவார உரிமை சட்ட வழக்குகள்
C) முத்திரைத்தாள் கட்டணம் வழக்குகள்
D) "நில உடமை மேம்பாடு திட்டம்" திருத்தம் வழக்குகள்
(TNPSC – VAO – 2016)

1139. கிராம கணக்கு எண் 1 என்பது
A) சாகுபடி கணக்கு B) அடங்கல்
C) குத்தகை பதிவேடு D) இனாம் பதிவேடு
(TNPSC – VAO – 2016)

1140. எந்த ஒரு வட்டத்திற்கும் வருவாய் தீர்வாயம் நடத்தும் அலுவலர்களாக யார் இருப்பர்?
A) துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அல்லது வட்டார வளர்ச்சி அலுவலர்
B) வட்டாட்சியர், தனி வட்டாட்சியர் அல்லது வட்டார வளர்ச்சி அலுவலர்
C) துணை வட்டாட்சியர் மற்றும் தனி வட்டாட்சியர்
D) துணை ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் அல்லது மாவட்ட ஆட்சி தலைவர்
(TNPSC – VAO – 2016)

1141. எத்தனை வகையான நஞ்சை நிலங்கள் உள்ளன?
A) 3 B) 4 C) 5 D) 6
(TNPSC – VAO – 2016)

1142. கிராம நிர்வாக அலுவலரால் 'B' நமுனாவில் பதியப்படுவது யாது?
A) ஆக்ரமணம் (அ) ஆக்கிரமிப்பு
B) பட்டா மாறுதல்
C) சிட்டா
D) 2C பட்டா
(TNPSC – VAO – 2016)

1143. கீழ்க்காண்பனவற்றுள் மிக முக்கியமான வேளாண்மையே அடிப்படையாகக் கொண்ட தொழில்
A) இரும்பு எஃகு B) சிமெண்ட்
C) சர்க்கரை D) சணல்
(TNPSC – VAO – 2016)

1144. கீழ்வருவனவற்றை பொருத்தி சரியான விடையை தேர்வு செய்க :
a) ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு பணிகள் — 1. 2002
b) தேசிய ஊரக சுகாதாரப்பணித் திட்டம் — 2. 1975
c) தேசிய சுகாதாரக்கொள்கை — 3. 1986
d) தேசிய கல்விக் கொள்கை — 4. 2005

	a	b	c	d
A)	3	1	4	2
B)	2	4	1	3
C)	3	2	4	1
D)	1	3	2	4

(TNPSC – Gr-II A – 2016)

1145. கீழ்வருவனவற்றை பொருத்தி சரியான விடையை தேர்வு செய்க :
a) நிர்மல் பாரத் அபியான் — 1. ஊரக சாலைகள்
b) பிரதான் மந்திரி கிராம சதக்யோஜனா — 2. அனைத்து வாழ்விடங்களுக்கும் அடிப்படை கட்டமைப்பு வசதி செய்து தருதல்
c) கிராம கட்டமைப்பு திட்டம் — 3. கிராம சுகாதாரம்
d) தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டுத் திட்டம் — 4. மகாத்மா காந்தி வேலை உறுதி திட்டத்தில் உருவாக்கப்பட்ட சொத்துக்களை நிலைப்படுத்துதல்

	a	b	c	d
A)	3	1	4	2
B)	1	3	2	4
C)	4	1	3	2
D)	2	4	1	3

(TNPSC – Gr-II A – 2016)

1135 ....B 1136 ....D 1137 ..... C 1138 .... B 1139 ...... A 1140 ..... D 1141 ..... A 1142 .... A 1143 ..... C 1144 ..... B 1145 ....A

1146. பின்வரும் நிதி ஆணையங்களில், மத்திய அரசின் அனைத்து வரிகளின் நிகர வருமானத்தினை மாநிலங்களுக்கு அதிகார பகிர்வு வழங்க பரிந்துரை செய்த ஆணையம் எது?

A) 8 வது நிதி ஆணையம்
B) 11 வது நிதி ஆணையம்
C) 10 வது நிதி ஆணையம்
D) 9 வது நிதி ஆணையம்

(TNPSC – Gr-II A – 2016)

1147. 1868 ஆம் ஆண்டில், இந்தியாவின் தேசிய வருவாய் மதிப்பீட்டுக் குழுவினைத் தலைமை தாங்கியவர்

A) V.K.R.V. ராவ் ஆவார்
B) ஷா மற்றும் கம்பட் ஆவார்
C) தாதாபாய் நௌரோஜி ஆவார்
D) W.C. பீட்டர்கள் ஆவார்

(TNPSC – Gr-II A – 2016)

1148. இந்த உற்பத்தி மேம்பாட்டு திறனை வெளிக் கொணர, பாரத நிர்மான் திட்டம் தொடங்கப்பட்டது?

A) இந்திய பத்திர சந்தை
B) பொதுத்துறை நிறுவனங்களின் பொறுப்பேற்புப் பணி
C) நகர்புற இந்தியா
D) கிராமப்புற இந்தியா

(TNPSC – Gr-II A – 2016)

1149. இந்திய தனித்துவ அடையாள ஆணையம் எப்போது முதல் ஆதார் அட்டையை உருவாக்கியது?

A) ஆகஸ்ட் 29, 2009 B) செப்டம்பர் 26, 2011
C) செப்டம்பர் 29, 2010 D) அக்டோபர் 25, 2010

(TNPSC – Gr-II A – 2016)

1150. கீழ்வருவதில் எந்த ஒன்று, ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் குறைந்தபட்ச அடிப்படை சேவைகள் (BMS) திட்டத்தில் இடம் பெறவில்லை?

A) அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர் வழங்குதல்
B) ஆரம்பக் கல்வி அனைவருக்கும் கிடைக்கச் செய்தல்
C) புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களை வளர்ச்சியடையச் செய்தல்
D) ஆரம்ப சுகாதார வசதிகள் கிட்டுமாறு செய்தல்

(TNPSC – Gr-II A – 2016)

1151. சம அளவு வருமான பகிர்வை காட்டும் புள்ளியியல் குறியீடு

A) தேசிய வருமானம்
B) தலா வருமானம்
C) கினி கெழு
D) செலவிடத்தக்க தனிநபர் வருமானம்

(TNPSC – Gr-II A – 2016)

1152. இந்தியாவில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பிரயோகிக்கப்பட்ட ஊட்டச்சத்து திட்டமானது இந்த அமைப்பின் உதவியுடன் தொடங்கப் பட்டது

A) UNO B) WHO
C) UNICEF D) CARE

(TNPSC – ASST. JAILOR IN PRISON DEPT. – 2016)

1153. எந்த மாநிலங்களில், மாநிலங்களுக்கு இடையேயான வறுமை விகிதாசார வேறுபாடு அதிகளவில் உள்ளது?

A) பீகார், ஒரிசா, மத்திய பிரதேசம்
B) கர்நாடகம், கேரளா, தமிழ்நாடு
C) பஞ்சாப், ஹரியானா, குஜராத்
D) பீகார், தமிழ் நாடு, குஜராத்

(TNPSC – ASST. JAILOR IN PRISON DEPT. – 2016)

1154. எந்த வகை வேலையின்மை, இந்திய வேளாண்மையில் பரவலாக உள்ளது?

A) அமைப்புச் சார்ந்த வேலையின்மை
B) பருவ காலம் சார்ந்த வேலையின்மை
C) சுழற்சி சார்ந்த வேலையின்மை
D) தொழில்நுட்பம் சார்ந்த வேலையின்மை

(TNPSC – ASST. JAILOR IN PRISON DEPT. – 2016)

1155. இந்தியாவில் வேலைவாய்ப்பின்மைக்கு இது காரணம் அல்ல

A) மக்கள்தொகை பெருக்கம்
B) தேவைக்கு குறைவான வேலைவாய்ப்பு திட்டமிடல்
C) தொழிலில் துரித முன்னேற்றம்
D) மனிதவளத் திட்டத்தில் குறைபாடு

(TNPSC – ASST. JAILOR IN PRISON DEPT. – 2016)

1156. இந்தியாவில் தேசிய வருமானம் யாரால் கணக்கிடப் படுகிறது?

A) திட்டக் குழு
B) நிதிக் குழு
C) இந்திய புள்ளியியல் நிறுவனம்
D) மத்திய புள்ளியியல் அமைப்பு

(TNPSC – ASST. JAILOR IN PRISON DEPT. – 2016)

1146 .... B 1147 .... C 1148 ..... D 1149 .... C 1150 ...... C 1151 ..... C 1152 ..... C 1153 .... A 1154 ..... B 1155 ..... C 1156 ... D

1157. கீழ்க்கண்டவற்றில் அமைப்புசாரா பெண் தொழிலாளர்களின் பிரச்சனை எது?

A) சம ஊதியம்
B) குறிப்பிட்ட மணியளவிலான வேலை
C) தொழில் (வேலை) வித்தியாசங் கண்டறிதல்
D) பொருளாதார சுதந்திரம்

(TNPSC - ASST. JAILOR IN PRISON DEPT. - 2016)

1158. 2011 மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி, இந்திய மொத்த மக்கட்தொகையில் எத்தனை சதவீதம் பேர் மாற்றுத் திறனாளிகள்?

A) 2.01 B) 2.21 C) 2.51 D) 2.71

(TNPSC - ASST. JAILOR IN PRISON DEPT. - 2016)

1159. தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் முன்னால் எந்தப் பெயரில் அழைக்கப்பட்டது?

A) அந்தோதயா திட்டம்
B) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம்
C) ஊரக இளைஞர் வேலைவாய்ப்புத் திட்டம்
D) உணவிற்கான வேலைவாய்ப்புத் திட்டம்

(TNPSC - ASST. JAILOR IN PRISON DEPT. - 2016)

1160. கீழ்க்காணும் வாக்கியங்களை கவனி:

கூற்று (A): பல்வேறு வணிக / வியாபார நிறுவனங்கள் தங்களின் இலாபத்தை அதிகப்படுத்துவதற்காக குழந்தைகளை பணியில் அமர்த்துகின்றனர்.

காரணம் (R): குழந்தைகள் பணியில் அமர்த்துவதன் மூலம் குழந்தைகள் பொருளாதார ரீதியாக சுரண்டப்படுகின்றார்கள்.

A) (A) மற்றும் (R) இரண்டுமே சரி, மேலும் (R) என்பது (A) - விற்கு சரியான விளக்கம்
B) (A) மற்றும் (R) இரண்டுமே சரி, மேலும் (R) என்பது (A)-விற்கு சரியான விளக்கமல்ல
C) (A) சரி ஆனால் (R) தவறு
D) (A) தவறு ஆனால் (R) சரி

(TNPSC - ASST. JAILOR IN PRISON DEPT. - 2016)

1161. பெரிய அளவிலான வறுமைக்கான காரணம்

A) மிதமான பொருளாதார வளர்ச்சி
B) மிதமான விவசாய செயல்
C) வளர்ச்சி துறைகளில் காணப்படும் மெதுவான வேலைவாய்ப்புகள்
D) பணவீக்க குறைவு மற்றும் உணவு சாராத விலைகள்

(TNPSC - ASST. JAILOR IN PRISON DEPT. - 2016)

1162. பின்வருவனவற்றுள் எந்த ஒன்று இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட பிரதான வறுமை ஒழிப்புத் திட்டமாகும்?

A) IADP B) IAAP C) HYVP D) IRDP

(TNPSC - ASST. JAILOR IN PRISON DEPT. - 2016)

1163. கீழ்க்காணும் வாக்கியங்களை கவனி :

கூற்று (A) : இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் வேலையில்லாதவர்கள் சமமாக பரவியிருக்கவில்லை.

காரணம் (R) : வேலைவாய்ப்பு வளர்ச்சி ஒரு ஆண்டிற்கு இரண்டு சதவீதம் மட்டும் உள்ளது.

A) (A) மற்றும் (R) இரண்டுமே சரி, மேலும் (R) என்பது (A)-விற்கு சரியான விளக்கம்
B) (A) மற்றும் (R) இரண்டுமே சரி, மேலும் (R) என்பது (A)-விற்கு சரியான விளக்கமல்ல
C) (A) சரி ஆனால் (R) தவறு
D) (A) தவறு ஆனால் (R) சரி

(TNPSC - ASST. JAILOR IN PRISON DEPT. - 2016)

1164. பொருத்துக :

	பட்டியல் I		பட்டியல் II
a)	ஆடம் ஸ்மித்	1.	வறுமைக்கோடு
b)	பட்டினிக் கோடு	2.	ஒப்புமை வறுமை
c)	இந்திய தேசிய திட்டக் குழு	3.	தேசங்களின் செல்வம்
d)	வாழ்வதற்கு அத்தியாவசியமான பொருட்களில்லா வறுமை	4.	உணவு மற்றும் விவசாய நிறுவனத்தின் முதல் பொதுச் செயலர்
		5.	பூர்ணமான / உண்மையான வறுமை

	a	b	c	d
A)	3	4	2	1
B)	4	3	2	1
C)	3	4	1	5
D)	4	3	2	5

(TNPSC - ASST. JAILOR IN PRISON DEPT. - 2016)

1165. ஆசிய பசிபிக் பொருளாதார சர்வதேச கூட்டமைப்பின் 27வது சந்திப்பு எந்த நாட்டில் நடைபெற உள்ளது?

A) பிலிப்பைன்ஸ் B) பீஜிங்
C) மெக்சிகோ D) மலேசியா

(TNPSC - ASST. JAILOR IN PRISON DEPT. - 2016)

1166. இந்தியாவில் அதிக காப்பி பயிரிடும் மாநிலம்

A) கர்நாடகம் B) கேரளா
C) மகாராஷ்டிரா D) தமிழ்நாடு

(TNPSC - ASST. JAILOR IN PRISON DEPT. - 2016)

1157 ....C 1158 .... B 1159 .....D 1160 .... A 1161 ...... C 1162 .....D 1163..... B 1164 .... C 1165 .....A 1166 ..... A

1167. பணவீக்கம் அதிகரிப்பதற்கான காரணம் அதிக

A) பணஅளிப்பு B) உற்பத்தி
C) மக்கள் தொகை D) வேலைவாய்ப்பு

(TNPSC - ASST. JAILOR IN PRISON DEPT. - 2016)

1168. பிரதான் மந்திரி கிராம சடக் (சாலை) யோஜனாவின் கீழ் வரும் திட்டம் எது?

A) குடிநீர் இணைப்பு
B) சாலை இணைப்பு
C) சமையல் எரிவாயு இணைப்பு
D) மின்சாரம் இணைப்பு

(TNPSC - ASST. JAILOR IN PRISON DEPT. - 2016)

1169. உலக வர்த்தக மையத்தின் (WTO) 2013 ஆம் ஆண்டிற்கான தர வரிசை மதிப்பீட்டின்படி, உலக வணிகச் சரக்கு வர்த்தகத்தில் இந்தியா, பெரும் அளவிலான ஏற்றுமதி மற்றும் இறக்கு மதியாளராக உள்ள நிலைகள் முறையே

A) 12வது; 19வது ஆகும் B) 19வது; 12வது ஆகும்
C) 8வது; 10வது ஆகும் D) 10வது; 8வது ஆகும்

(TNPSC - ASST. JAILOR IN PRISON DEPT. - 2016)

1170. இந்தியாவின் மக்கள் தொகை பெருக்கத்தில் எந்த ஆண்டு மிகப்பெரிய பிளவு ஆண்டு (the year of great divide) என அழைக்கப்படுகிறது?

A) 1931 B) 1921 C) 1881 D) 2011

(TNPSC - ASST. JAILOR IN PRISON DEPT. - 2016)

1171. இந்தியாவின் பதினான்காம் நிதிக்குழுவின் தலைவர் இவர்

A) சி. ரெங்கராஜன் B) எ.எம்.குஸ்ரோ
C) ஒய். பி. சவான் D) ஒய்.வி. ரெட்டி

(TNPSC - ASST. JAILOR IN PRISON DEPT. - 2016)

1172. பசுமைப் புரட்சி என்பது

A) காடுகளை உருவாக்குவது
B) வீரிய வித்துக்கள், இராசாயன உரங்கள், பூச்சிக் கொல்லிகள், இயந்திரங்களை பயன்படுத்துவது
C) சுற்றுப்புறச்சூழலை பசுமையாக்குவது
D) அதிக அளவில் செடிகளை நடுவது

(TNPSC - ASST. JAILOR IN PRISON DEPT. - 2016)

1173. கீழ்க்கண்டவற்றுள் கூலியில்லா வேலை வாய்ப்புத் திட்டத்தினை அடையாளம் காட்டுக.

A) ஜவகர் ரோஜார் யோஜனா
B) இந்திர அவாஸ் யோஜனா
C) தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டம்
D) TRYSEM

(TNPSC - ASST. JAILOR IN PRISON DEPT. - 2016)

1174. இது இந்தியாவின் முதல் பசுமை நில (green field) சிறப்புப் பொருளாதார மண்டலம்

A) SEZ Bhadhon
B) SEZ Vishakapattinam
C) SEZ Indore
D) SEZ Noida

(TNPSC - ASST. JAILOR IN PRISON DEPT. - 2016)

1175. வேளான் முன்னேற்றத்திற்கான பன்னாட்டு நிதியின் ஆட்சிக் குழு தலைவர் யார்?

A) ராகுல் வர்மா B) தினேஷ் சர்மா
C) தத் D) மிதுன் வர்மா

(TNPSC - LIBRARIAN - 2016)

1176. இந்தியாவில் மருந்து கம்பெனிக்கு எவ்வளவு சதவிகிதம் அந்நிய நேரடி முதலீடு அனுமதிக்கப் பட்டுள்ளது?

A) 100% B) 51% C) 60% D) 48%

(TNPSC - LIBRARIAN - 2016)

1177. ரங்கராஜன் குழு எவற்றுடன் தொடர்புடையது?

A) வங்கி சீர்திருத்தம்
B) பங்கு சந்தை சீர்திருத்தம்
C) பொதுத்துறை நிறுவனங்களின் முதலீட்டை குறைத்தல்
D) தொழில் அனுமதி

(TNPSC - LIBRARIAN - 2016)

1178. இவற்றில் நான்காவது துறை என எது அழைக்கப் படுகின்றது?

A) விவசாயத் துறை B) தகவல் துறை
C) தொழில் துறை D) சேவை துறை

(TNPSC - LIBRARIAN - 2016)

1179. சில மாநிலங்கள் முன்பு அதிக வளர்ச்சி மற்றும் அதிக வருமானம் கொண்டதாக இருந்தன. ஆனால் 11வது திட்ட காலத்தில் அதன் வளர்ச்சி குறைந்துள்ளன. அவைகள்

A) கர்நாடகா மற்றும் கேரளா
B) தமிழ்நாடு மற்றும் ஆந்திர பிரதேசம்
C) ஆந்திர பிரதேசம் மற்றும் கர்நாடகா
D) கர்நாடகா மற்றும் தமிழ்நாடு

(TNPSC - LIBRARIAN - 2016)

1167 ....A 1168 .... B 1169 ..... B 1170 .... B 1171 ..... D 1172 ..... B 1173 ..... B 1174 .... C 1175 ..... B 1176 ..... A
1177 ....C 1178 .... B 1179 ..... D

1180. யாருடைய பரிந்துரையின் அடிப்படையில் ரிசர்வ் வங்கியின் ஊரகக் கடன்கள் அனைத்தும் நபார்ட் வங்கிக்கு மாற்றப்பட்டது?

A) கிராபிக்கார்ட் (CRAFICARD)
B) நாரிமன் (NARIMANN)
C) ஸீலீகள் (SCHELEGAL)
D) பென்ச்மென் (BENCH MANN)

(TNPSC – LIBRARIAN – 2016)

1181. சர்வதேச இயற்கை பேரிடர் குறைத்தலுக்கான பத்தாண்டு திட்டம் அறிவிக்கப்பட்ட பத்தாண்டு ________ ஆகும்.

A) 1980-1990 B) 1990-2000
C) 2000-2010 D) 2010-2020

(TNPSC – LIBRARIAN – 2016)

1182. IUCN சிவப்பு புத்தகம் புள்ளி விவரம் 2004 படி, எத்தனை வகையான மரங்கள் இந்தியாவில் அழிந்துள்ளன?

A) 87 B) 89 C) 97 D) 99

(TNPSC – LIBRARIAN – 2016)

1183. உலகில் தற்பொழுது அதிக சர்க்கரை உற்பத்தி செய்யும் நாடாக எது தோன்றியுள்ளது?

A) ருஷ்யா B) அமெரிக்கா
C) இந்தியா D) பிரேசில்

(TNPSC – LIBRARIAN – 2016)

1184. "மக்களின் வாழ்க்கை தரத்தை அதிகமாக உயர்த்துவது தான் அடிப்படை நோக்கம்" மற்றும் மேலும் "இவை சாதாரண பொது மக்கள், பலவீனமான வகுப்பினர் மற்றும் முன்னுரிமை அளிக்கப்படாத மக்களுக்கானது என வலியுறுத்தியது". இவை எந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது?

A) முதல் ஐந்தாண்டு திட்டம்
B) மூன்றாவது ஐந்தாண்டு திட்டம்
C) நான்காவது ஐந்தாண்டு திட்டம்
D) ஆறாவது ஐந்தாண்டு திட்டம்

(TNPSC – LIBRARIAN – 2016)

1185. முதல் மூன்று ஐந்தாண்டு திட்டங்களில் எதன் ஒன்றை நிறுவுவது என பேசப்பட்டன?

A) கலப்பு பொருளாதார முறை
B) சமதர்ம சமுதாயத்தை நிறுவுவது
C) சமூக மற்றும் பொருளாதார மக்களாட்சியை நிறுவுவது
D) (B) மற்றும் (C) இரண்டும்

(TNPSC – LIBRARIAN – 2016)

1186. இந்தியாவில் 2001-11 கால கட்டத்தில் மக்கள் தொகை சராசரி ஆண்டு வளர்ச்சி விகிதம் ________

A) 1.31% B) 1.93% C) 1.64% D) 2.1%

(TNPSC – MOTOR VEHICLE MAINTENANCE – 2016)

1187. பின்வருபவனுள் எது மக்கள் தொகையை தீர்மானிக்கும் காரணி அல்ல?

A) பிறப்பு வீதம் B) இறப்பு வீதம்
C) இடப்பெயர்ச்சி D) வறுமை

(TNPSC – MOTOR VEHICLE MAINTENANCE – 2016)

1188. பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா என்ற திட்டம் எப்போது துவங்கப்பட்டது?

A) ஜீலை 9, 2014 B) ஜீன் 6, 2014
C) மே 9, 2015 D) ஆகஸ்ட் 2, 2015

(TNPSC – MOTOR VEHICLE MAINTENANCE – 2016)

1189. "HRIDAY" என்ற சொல் எதைக் குறிக்கிறது?

A) நகர மேம்பாடு B) விவசாய மேம்பாடு
C) கல்வி மேம்பாடு D) வறுமை ஒழிப்பு

(TNPSC – MOTOR VEHICLE MAINTENANCE – 2016)

1190. இவற்றில் எந்த எரிசக்தி இலவசமானது மற்றும் விலை ஆதிக்கம் இல்லாதது என்று கருதப் படுகிறது?

A) வணிக எரிசக்தி
B) வணிகமல்லாத எரிசக்தி
C) (A) மற்றும் (B) இரண்டும்
D) நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரி

(TNPSC – MOTOR VEHICLE MAINTENANCE – 2016)

1191. மத்திய அரசு அண்மையில் GST-யை இந்தியாவில் நடைமுறைப்படுத்த முடிவெடுத்துள்ளது. GST என்பதன் விரிவாக்கம் என்ன?

A) பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி
B) பொது விற்பனைகள் வரி
C) பொது சேவைகள் வரி
D) பண்டங்கள் விற்பனைகள் வரி

(TNPSC – MOTOR VEHICLE MAINTENANCE – 2016)

1192. அண்மையில் ரிசர்வ் வங்கி யாருடைய தலைமையின் கீழ் நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளை ஆராய ஒரு உயர்மட்டக் குழுவை அமர்த்தியது?

A) C. ரங்கராஜன் B) யஷ்வந்த் சின்கா
C) ரகுராம் ராஜன் D) R. காந்தி

(TNPSC – MOTOR VEHICLE MAINTENANCE – 2016)

1180 .... A 1181 .... B 1182 ..... A 1183 .... C 1184 ...... C 1185 ..... B 1186 ..... C 1187 .... D 1188 ..... C 1189 ..... A
1190 .... B 1191 .... A 1192 ..... D

1193. பசுமைப் புரட்சியால் குறிப்பாக இவ்வகை உணவு உற்பத்தியில் பெருக்கம் ஏற்பட்டது

A) அரிசி, கோதுமை
B) கோதுமை, எண்ணெய் வித்துக்கள்
C) அரிசி மற்றும் எண்ணெய் வித்துக்கள்
D) அரிசி, கரும்பு

(TNPSC – TESTER ASST. – 2016)

1194. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி கீழ்க்குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க:

பட்டியல் I	பட்டியல் II
a. நிலத்தின் இயல்பு	1. இடர்பாடுகளை ஏற்றல்
b உழைப்பின் இயல்பு	2. ஆக்கமுடையது
c. மூலதனத்தின் இயல்பு	3. இடம்பெயரக் கூடியது
d. தொழிலமைப்பின் இயல்பு	4. அளிப்பு நிலையானது

	a	b	c	d
A)	4	1	2	3
B)	1	3	2	4
C)	4	3	2	1
D)	2	4	3	1

(TNPSC – TESTER ASST. – 2016)

1195. தாய்த் தொழில் என அழைக்கப்படும் தொழில்

A) நெசவுத் தொழில் B) பருத்தித் தொழில்
C) இரும்பு எஃகுத் தொழில் D) சர்க்கரைத் தொழில்

(TNPSC – TESTER ASST. – 2016)

1196. வேளாண்மை உற்பத்தி என்பது

A) நாட்டின் மொத்த வேளாண் உற்பத்தி
B) உள்ளீடு, வெளியீட்டுக்கும் உள்ள விகிதம்
C) அனைத்து உள்ளீடு, வெளியீடுகளின் கூடுதல்
D) அனைத்து மாநில, யூனியன் பிரதேசங்களின் மொத்த உற்பத்தி

(TNPSC – TESTER ASST. – 2016)

1197. ஏழ்மை என்பது

A) போதுமான சேமிப்பின்மை
B) போதுமான கல்வியின்மை
C) போதுமான உடல்நலமின்மை
D) போதுமான வருமானமின்மை

(TNPSC – TESTER ASST. – 2016)

1198. ஐக்கிய நாடுகளின் மாநாடு 2002இல் ஜோகனேஸ் பர்க்கில் நடந்தது. இதன் நோக்கம்

A) மென்பொருள் மேம்பாடு
B) போக்குவரத்து மேம்பாடு
C) சமூக மேம்பாடு
D) பேணத் தகுந்த மேம்பாடு

(TNPSC – TESTER ASST. – 2016)

1199. இந்திய வானொலி சேவை எப்பொழுது தொடங்கப்பட்டது?

A) 1927 B) 1937 C) 1947 D) 1827

(TNPSC – TESTER ASST. – 2016)

1200. உலகமயமாக்கப்படல் எதனை அறிவுறுத்துகிறது?

A) பொருளாதார ஒருங்கிணைப்பு
B) அரசியல் ஒருங்கிணைப்பு
C) சமூக ஒருங்கிணைப்பு
D) இவை அனைத்தும்

(TNPSC – TESTER ASST. – 2016)

1201. இயற்கைவாதம் என்றால்

A) இயற்கையின் விதி B) செயற்கை விதி
C) சட்டத்தின் விதி D) உற்பத்தி விதி

(TNPSC – TESTER ASST. – 2016)

1202. பதினோராவது ஐந்தாண்டு திட்டத்தின் பல்வேறு நோக்கங்களுள் ஒன்று கீழே கொடுக்கப் பட்டுள்ளது. சரியாக அதனைத் தேர்ந்தெடுக்கவும்.

A) உயர் கல்வியில் இடைநிற்றலை குறைத்தல்
B) தொடக்கக் கல்வியில் இடைநிற்றலை குறைத்தல்
C) ஆசிரியர் கல்வியில் இடைநிற்றலை குறைத்தல்
D) இடைநிலைக் கல்வியில் இடைநிற்றலை குறைத்தல்

(TNPSC – TESTER ASST. – 2016)

1203. தொழில்சார் வகை பிரிவை சாராத துறை எது?

A) முதன்மைத் துறை
B) தனியார் துறை
C) இரண்டாம் முறை
D) சார்புத் துறை

(TNPSC – TESTER ASST. – 2016)

1193 ....A 1194 .... C 1195 ..... C 1196 .... B 1197 ..... D 1198 ..... D 1199 ..... A 1200 .... A 1201 ..... A 1202 ..... B
1203 .... B